[2002 மே 10

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-20

(ஈ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2002) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 9-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 17 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 17 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2002), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திருத்தம் குறித்த என்னுடைய கருத்துகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எடுத்து வைக்கின்றேன்.

இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கின்ற சட்டங்களில், நடைமுறைகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்றால், அந்தச் சட்டத்தினுடைய அடிப்படையை, நோக்கத்தைப் புரிந்துகொண்டு, மிகவும் சிந்தித்து, ஆழ்ந்து திருத்தங்கள்

@ 8-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.